# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.316/2017 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | அ.சா.4 |
| Name | : | ஏழுமலை, உதவி ஆய்வாளர், கீழ்கொடுங்காலூர் காவல் நிலையம். |
| Father's Name | : | கேசவன், |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | 60 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 14.11.2025.

**5ம் எதிரி (மோகன்) இறந்துவிட்டார். 1 முதல் 4, 6 எதிரிகள் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எழில்தாசன் அவர்கள்' பணி ஓய்வு பெற்றுவிட்டார். அதனால' அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்ய இயலவில்லை. அவர்களது கையெழுத்து எனக்கு தெரியும். நான் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 10.10.2013ம் தேதி அ.சா.1னிடம் புகார் பெற்று 03.11.2013ம் தேதி நிலை குற்ற எண்.266/2013 இதச பிரிவு 147, 342, 323, 355, 354, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகும். சம்பவ சாட்சிகளாக ஷகிலா, சரவணன், ஜெயலட்சுமி, சேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஏழுமலை, சிவகுமார் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.5 ஆகும். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள்மீது இதச பிரிவு 147, 342, 352, 355, 354, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் தொல்லை தடுப்பு சட்டத்தின்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புலன்விசாரணையின்போது அ.சா.1 முதல் அ.சா.3 அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நான் அல்ல. நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை அதிகாரி வழக்கினை சரிவர புலன்விசாரண செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செயதுள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல. புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகளை சரிவர புலன்விசாரணை செய்யாமல் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.